1987 நவம்பர் 16]

(முற்பகல் 10-40)

திரு. எஸ். வேணுகோபால் : தலைவரவர்களே, இந்த மீன் பிடித் துறைமுகத்தின் நுழைவாயிலை அடிக்கடி மண் மூடிவிடுகிறது. நிரந்தரமாக மண் மூடாமல் தடுக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தத் துறைமுகத்தின் நுழைவாயிலில் சில நேரங்களில் மண் மூடிக் காணப்படுவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள் ; நானும் பார்த்திருக்கிறேன். நானும் அவர்களும் சேர்ந்தே அந்த இடத்தை பார்வையிட்டிருக்கிறோம் அங்கே மண் மேடிடுவதை நிரந்தரமாகப் போக்க வழி தெரியவில்லை. கடலுக்கு அடியிலிருந்து மண் வந்து சேருகிறது. ஒரு சீசனில் மண் வந்து சேர்ந்தால் இன்னொரு சீசனில் திரும்பப் போய் விடுகிறது என்று சொல்கிறார்கள். இன்னொரு கருத்தும் சொல்லப்படுகிறது. இந்தத் துறைமுகத்தின் நுழைவாயிலை கடலுக்கு உள்ளே கட்டிவிட்டதால் அங்கே மண் வந்து சேருகிறது. மண் அரிப்பும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நிரந்தரமாக, மண் வந்து சேராமல் இருக்க துறைமுகப் பொறுப்புக்கழகம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்து மத்திய துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு எழுதியிருக்கிறோம்.

திரு. எஸ். வேணுகோபால் : தலைவரவர்களே, இந்த மீன் பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதுபற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது. மத்திய அரசும் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்து கொண்டிருக்கிறது. மண்ணை அப்புறப்படுத்த சில கோடி ரூபாய்களை — 5 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன் — இயந்திரம் வாங்குவதற்கு கொடுத்து, இயந்திரங்களை வரவழைத்துக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், மத்திய அரசு இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கருதுகிறேன்.

திருத்தணி மருத்துவமனையில் விபத்துப் பிரிவு.

125—(*வினா 13217) திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணியில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனையில் விபத்துப் பிரிவு எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு திருத்தணி அரசு மருத்துவமனையில் 29-6-1983 முதல் செயல் பட்டு வருகிறது.

[1987 நவம்பர் 16

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, திருத்தணி அரசு மருத்துவ மனையில் கட்டப்பட்டுள்ள விபத்து பிரிவு சுமார் இரண்டு ஆண்டுகளாகத் திறக்கப்படாமல், மூடப்பட்டிருக்கிறது. நான் அதுபற்றி தலைமை மருத்துவரை அழைத்துக் கேட்டபோது கூடுதலாக தேவைப்படுகின்ற மருத்துவர்கள், உதவியாளர்கள், களப்பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை; ஆகவேதான் திறக்கப்படாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, அமைச்சர் அவர்களுக்குத் தவறான தகவலை அதிகாரிகள் தந்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. நான் அங்கே போய் பார்த்தேன், நேற்றுவரையில் செயல்படவில்லை. அந்தப் பிரிவைத் திறந்து, மீண்டும் செயல்படுத்தி, அந்தப் பகுதியில் விபத்திற்கு உள்ளாகிற மக்கள் பயன்பெற தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளாக இது செயல்படுகிறது என்று குறிப்பு தந்திருக்கிறார்கள். ஆனால் இரண்டு ஆண்டுகளாக மூடிக்கிடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். தவறான தகவலைத் தந்திருந்தால் நிச்சயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். அந்தப் பிரிவு செயல்படாமல் இருந்தால் அதைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும். அது செயல்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் புகாராக ஏற்று, விசாரித்து, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, திருத்தணி அறுபடை வீடுகளில் ஒன்றாக இருக்கிறது. அங்கே திருவிழாக் காலங்களில் கூட்டம் அதிகமாக வரும்; விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் விழா நடைபெறுவதற்கு முன்னால் மாவட்ட அலுவலர்களையும் மற்ற அதிகாரிகளையும் அழைத்து விழா சிறப்பாக நடைபெற முன்னேற்பாடுகளைச் செய்கின்ற நேரத்தில் விபத்துக்குள்ளாகிறவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்க மருத்துவர்களை அழைத்து கேட்டபோது, 'ஆக்சிடென்ட் வார்டு' இருக்கிறது என்று சொன்னாலும் கூட இப்போது செயல்படாமல் இருக்கிறது என்று தலைமை மருத்துவர் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த விபத்துப் பிரிவைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர்தான் போர்க்களம் அமைந்த இடம். அங்குதான் விபத்து அதிகமாக ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. திருத்தணிகை திருக்கல்யாணம் நடந்த இடம் என்று சொல்கிறார்கள். அங்கே விபத்து ஏற்படுகிறது என்று சொல்வது விந்தையாக இருக்கிறது இருந்தாலும் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.